உ
சிவமயம்

# நினைவு மலர்



அமரர்

## இராசதுரை இராஜேஸ்வரி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த வெளியீடு

14.01.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

நெடுவானம் பொழி நீராய்

விழித்திரையில் தினம் முட்ட

படுமரமாய் நீ வீழ்ந்து

பாடை ஏறி நீறானாய்

வாடும் எம் மனங்கள்

வையம் உள்ள வரை

தேடும் உன் முகத்தை

ஏடும் உனக்காக

எழுத்தும் உனக்காக

ஓடும் கண்ணீராய்

உன்பாதம் வைக்கின்றோம்.



குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"



அமரர்

# இராசதுரை இராஜேஸ்வரி

அவர்கள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09.01.1949 | 15.12.2014 |

## திதி வெண்பா

ஜய வருடம் மார்கழித் திங்கள் பதினைந்தாம் திதி
புனித நாளாம் திங்கள் உத்தர நட்சத்திரமதின்
இராஜேஸ்வரி எனும் நாமம் கொண்ட இல்லத்தார்
இறைவன் திருவடி சேர்ந்த நாள் இதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் இராசதுரை இராஜேஸ்வரி

## அவர்களின்

# வாழ்க்கைச் சுவடுகள்

அழகிய தீவான இலங்கைத் திருநாட்டில் வடபகுதியி அமைந்துள்ள யாழ்ப்பாண புனித பூமியில் சகல துறைகளையும் சிறப்ப கொண்ட கோட்டைக்காடு சுன்னாகத்திலே வாழ்ந்த செல்லப்பா + சின்னப்பிள்ளை தம்பதியினருக்கு மூன்றாவது புதல்வியாக 1949.01.09 அன்று இராஜேஸ்வரி அவதரித்தார். இவரது உடன் பிறப்புக்களாக தவமணி, அன்னரத்தினம் ஆகியோர் வாய்க்கப் பெற்றனர்.

இவர் தனது கல்வியை யா/ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயத்தில் கற்றார். அதன் பின்னர் திருமண வயதை எய்தியதும் பெற்றோரால் யாழ்ப்பாணத்தில் தனிச்சிறப்பு கொண்ட மானிப்பாயை சேர்ந்த தம்பையா+வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் புதல்வரான இராசதுரையை மனதிற்குப் பிடித்துப் போக பெற்றோரின் சம்மதத்துடன் 1976.05.19 அன்று கரம்பிடித்தார். திருமணத்தின் பின்னர் தமது வாழ் நாட்களில் மாமன், மாமி வீட்டிலும், தந்தை தாய் வீட்டிலும், மச்சான் மார்களுடனும், சகோதரிகளுடனும், அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து வந்தார்.

இல்லறம் நல்லறமாக இருக்க இல்லற வாழ்வின் நற்பயனாக பெண்ணின் பெருமையும் சிறப்புமான தாய்மையை அடைந்தார். பிள்ளைச் செல்வங்களாக மூத்த புதல்வன் ஜீவாவும், இரண்டாவது புதல்வி ரஞ்சனாவும், மூன்றாவது புதல்வி பிரதீபாவும், நான்காவது புதல்வியான தரணிகாவும் வாய்க்கப்பெற்றனர். பிள்ளைகளின் கல்வி யிலும், சமூகத்தில் நற்பிரஜைகளாகவும் திகழவும், கணவன் கிளிநொச்சி க்கு வேலைக்கு சென்ற வேளை ஏற்பட்ட யுத்த சூழ்நிலையில் காரணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினால் மீண்டும் வீடு வந்து சேரமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்ட வேளை பிள்ளைகளுக்கு தாயாக மட்டுமன்றி தந்தையாகவும், வழி காட்டினார்.

கால ஓட்டத்தில் இரண்டாவது மகளான ரஞ்சனாவுக்கு கனடாவைச் சேர்ந்த ரவீந்திரராஜா என்பவரை திருமணம் செய்து வைத்தார். சிறிது காலத்தின் பின்னர் மூன்றாவது மகளான பிரதீபாவுக்கும் நெதர்லாந்தைச் சேர்ந்த சதீஸ்குமாரை மருமகனாக்கினார். தொடர்ந்து தனது மூத்த மகன் ஜீவாவிற்கும் மயிலங்காட்டைச் சேர்ந்த அனுசயதீபாவை திருமணம் செய்து வைப்பதற்கு இந்தியா சென்றிருந்த வேளை மூன்றாவது மகளான பிரதீபா கர்ப்பமாக இருந்ததால் அவளையும் பாசத்துடன் கவனித்தார். முதன் முதலாக 2011இல் பேத்தி, பேரன் பிள்ளைகளை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்தார்.சிறிது காலத்தின் பின்னர் நான்காவது மகளாகிய தரணிகாவிற்கு கரவெட்டியை சேர்ந்த ஜெஸ்லியை மருமகனாக்கினார். பின்னர் மீண்டும் மூத்த பேத்தி, பேரன் பிள்ளைகளையும் இரண்டாவது மகளின் பேரப்பிள்ளையும் அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து கூடி மகிழ்ந்தார்.

இவர் ஒவ்வொரு நாளும் பிள்ளைகளுடனும், மருமக்களுடனும், பேரப்பிள்ளைகளுடனும், அளவளாவுவது மட்டு மன்றி தம் வீட்டில் உள்ள பூமரங்களுடனும் அதிகமாக பழகி தனது மகிழ்வினை பகிர்ந்து கொள்வார். எல்லோரும் இணைபிரியாத சகோதரர்கள் போல தனது சகோதரர்களுடனேயே எங்கு சென்றாலும் செல்லும் வழமையும், சிரித்த முகத்துடனும் எல்லோரையும் தனது பிள்ளைகள் போல வரவேற்கும் தன்மையும் கொண்டிருந்தார்.

இவ்வாறு இன்பமாக வாழ்ந்து வரும் காலகட்டத்தில் இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன்னர் உயர் இரத்த அழுத்த **(hypertension Pressure)** நோயை ஏற்படுத்தி விட்டான் இறைவன். இவ்வாறு காலம் கடந்து செல்ல கணவனே கண்கண்ட தெய்வம் என்பதற்கு ஏற்ப அவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புடனும், பாசத்துடன் பார்த்து வந்தார். அது மட்டுமன்றி பிள்ளைகளிடமும், பேரப்பிள்ளைகளிடமும் சந்தோசத்தை மட்டுமே பகிர்ந்து கொள்வார். நோயைப் பற்றி புலம்பியதுமில்லை. இவ்வாறு காலம் நகர்ந்து போகும் போது நோயின் தாக்கத்தால் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த போதே தொலைத்தேனே என்னவளை. கடந்த (15.12.2014) திங்கள் பிற்பகல் 03.15 அளவில் சிவபதம் அடைந்தார்.

இவரின் நல்ல மனதிற்கும் செய்த சிறந்த செயல்களுக்கும் எல்லோரிடமும் காட்டிய அன்பிற்கும், இவரின் இறுதிக் கிரியையிலும், இறுதி ஊர்வலத்திலும், அலைகடலாக மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தியமையே காட்சி. ஒவ்வொருவரும் தமது குடும்பத்தில் ஒவ்வொருவரை இழந்து தவிப்பது போல் தவித்து புலம்புவது, அழுதது இவரின் அன்பான குணத்தினையும், பாசமான வாழ்க்கையையும் பறை சாற்றுவதாகவே இருந்தது.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்"**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்**

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துன்பம் வரும் வேளையிலும்
## இன்பம் தந்தவள்.......

அன்பானவளே
அனுசரிக்கும் பண்பானவளே

இனியவளே
இன்முகம் காட்டி
இன்சொல் பேசும் இல்லத்தரசியே

பூக்களோடு பேசிப் பேசியே
பூக்களின் புன்னகையை
தனதாக்கி கொண்டவளே
கோபம் நான் கொண்டாலும் - பரி
தாபம் மட்டும் காட்டுபவளே

நோய் வந்த போதெல்லாம் -என்மீது
தாய் அன்பு கொண்டவளே

இயலாத வயதிலும்
இணை பிரியாத ஜோடியாய்
இறுதிவரை இருந்தோமே

இன்று
இரு விழியும் தேம்பி நிற்க
இருதயமும் ஏங்கி நிற்க
இடை நடுவில் போனதெங்கே



சமயம் வரும்போதெல்லாம் -சே
சமையல் செய்வோமே
உன் கையால் உண்பதைப்போ
உன்னதம் எதுகுமில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் பக்கம் இருக்கையில
உண்ணாமல் இருந்ததுமில்லை
உண்ட கோப்பை கழுவும் கஷ்ரம்
உணர்ந்ததும் இல்லையே

இனி என்ன செய்வேனென்று
இரவும் தூக்கமின்றி தவிக்கிறேன்

எப்போதும் சிரிக்கும் முகம்
இப்போது இங்கில்லையே
முப்போதும் தொழும் உன்னை
எப்போது இனி காண்பேனோ

அன்புக் கணவர்
- இராசதுரை -

தேடிச் சோறு நிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்ப மிக உழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக்கு இரையெனப் பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ
- பாரதி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த ஜீவாவின் ஜீவன் நீயல்லவா அம்மா....

தித்திக்க பேச
திங்களெல்லாம் காத்திருப்பேன்
திடுக்கிடும் செய்தி
திங்களன்று வந்தது
திரை விட்டு போனது - எங்கள்
திங்கள்குல திலகம் என்று

கண்டம்விட்டு கண்டம் சென்று
லண்டன் வாழும் எனக்கு
அண்டம் விட்டு சென்ற செய்தி
அலைபேசியின் அலறலுடன்
அலையின் ஆர்ப்பரிப்பாய் ஒலித்தது
அந்த கணமே ஐம்புலனும்
அடங்கிப்போனதம்மா



செய்வதறியாது திகைத்தேன்
செயலிழந்து கிடந்தேன்
கண்ணீர் கங்கை மட்டும்
கன்னத்தின் வழியே
கரைபுரண்டோடியது

எம்
கண் தூக்கத்தையும்
கனவுகளையும்
களவாடி சென்று விட்டாயே அம்மா

என் குழந்தைகள்
குளிப்பது முதல்
குறும்புகள் வரை
skype எனும் சாளரத்தின் வழியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைபோலவே
குதுகலமாய் பார்த்து ரசிப்பாயே

உங்களோடு
செல்லம் கொஞ்சும்
செல்ல சண்டை போடும்
இன்ப தருணங்கள்
இன்றும் கண்முன்னே நிற்குதே

வயசு போனாலும்
வடிவாகவே இருக்கிறீங்களே
என்ன கிறீம் பூசுறீங்களென
எக்குத்தப்பா கேட்க
புதுப் பொண்ணு கணக்கா வெட்கப்படுவாயே

நான் அறிந்த காலம் முதல் -நீ
அருந்தும் தேநீர் கோப்பையை
அவ்வப்போது கிண்டல் செய்வேன்
அதை எடுத்து வந்து - என்
அருகில் வைத்திருப்பேன் என
அடிக்கடி சொல்லிவந்தேன்

மதி கெட்ட காலன் - உன்
மதி முகம் மயங்க செய்தானோ
மதி இழந்து நிக்கிறோம்
மறுபடியும் காண மாட்டோமோ என்று

இறந்த நிலையில்
இலங்கையில் நீ
இயலாத நிலையில்
இங்கிலாந்தில் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக பார்க்கவும்
இறுதி கடமை செய்யவும்
இயலாத பாவி ஆனேனே ..........

கொஞ்சிட ஒரு மகனாயிருந்தும்
கொள்ளியிட
கொடுத்து வைக்கலையே

உன் கையால் உண்ணனும்
உன் ஆசையெல்லாம் நிறைவேற்றனும்
உன்னோடு கதை பேசணும்
உன் மடியில் தூங்கணும்
உன்னோட ஜீவா காத்திருக்கிறேன்

**அன்புள்ள மகன்**
**- ஜீவா -**

## மேலே செல்லுங்கள்

**சளைக்காத மனம்!**
சளைக்காத மனத்தைப் போல
வேறு சக்தியில்லை திறமை மட்டும் போதாது.
திறமையிருந்தும் தோற்றுப் போனவர்கள் ஏராளம்
புத்திசாலித்தனம் மட்டும் போதாது
"பலன் காணாத மேதை" என்பது பழமொழி
படிப்பு மட்டும் போதாது படித்தும்
பாதை தவறியவர்களால்
இவ்வுலகம் நிரம்பியிருக்கிது.
சளைக்காத மனமும் உறுதியும் தான்
வெற்றியைத் தேடித்தரும் சாதனங்கள்

**- கால்வின் கூலிட்ஜ் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான அம்மா குட்டி....

அன்பிலே அன்னையாய்
ஆயினும் நண்பியாய்
இருந்த ஒற்றை உறவு நீ அம்மா
ஈதல் குணமும்
உயரிய மனமும் கொண்ட
ஊரறிந்த உன்னத தாய் நீ

எங்களை எல்லாம்
ஏற்றிவிட்ட நீ
ஐயகோ என பதறவிட்டதேன்

ஒரு வேளை கூட
ஓய்வெடுக்காமல் வேலை செய்வாய்
ஒரேயடியாக ஓய்வெடுத்தது ஏனம்மா

நித்தம் நித்தம்
புத்தம் புது கதை பேசுவாய்
சித்தம் இங்கே துடிக்கவைச்சு
நிசப்தமாய் போனாயோ

பூக்களை பற்றியும்
பூக்கன்றுகள் பற்றியும்
பூரிப்போடு பேசும்
புன்னகை முகம் எங்கே

நிறைவாக பேசுவாய்
நிறைய பேசுவாய் -யாரையும்
குறை ஏதும் பேசாய்
புதினமும் சொல்லாத
புதுமைப் பெண் எங்கள் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவிலும் - உனைப்போல
கண்ணுக்கு இதமான - பூக்
கன்றுகள் வளர்த்தேன்
கண்டிப்பாக உனை அழைத்து
காட்டிட வேண்டுமென
கனவுகள் வளர்த்தேன்

skype இல் பார்த்தே
சந்தோசம் கொண்டாய்
வந்து பார்ப்பேனென்று
வாக்கும் தந்தாய்

கனவுகள் எல்லாமே
கனவாகிப் போக
கண் தூங்கி போனாயே அம்மா

மகளுக்கு நிறைய -எம்
மண்வாசனை சாப்பாடு தர
மனசார ஆசைப்பட்டாய்



மகன் பாடினால்
மனம் சலிக்காமல்
மணிக்கணக்கா கேட்டிருப்பாய்

மருமகனை - உன் மூத்த
மகனென்று சொல்லுவாய்
மருமகனுக்கு பிடித்த பாற்கஞ்சியை
வரும்போதெல்லாம் பண்ணுவாய்

இனி எங்கே போவோம்
இதெல்லாம் எப்படி காண்போம்

-

அன்புள்ள மகள்
- ரஞ்சனா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்பு சிநேகிதி அம்மா.....

உன்னருகில் இருந்து
உன்னோடே பயணப்பட்டேன்
உன் சிநேகிதியாய் நீண்டகாலம்
வெளிநாட்டு வாழ்க்கைக்கு
வெளியேற்றப் பட்டாலும்
ஈராண்டுக்கு ஒருமுறை
ஊர்வந்து உனைவந்து சேர்வேனே ...

உன்னை கண்டு கதைத்து
உன்னோடு உண்டு களித்து
உவகை கொள்ளும் காலம்
உருண்டோடி வந்தது

அன்பான அம்மாவுடன்
அழகான நாட்களுக்காய்
ஆவலோடு காத்திருந்தேன்



இடியென வந்தது - நீ
இறந்த செய்தி
இதயத்துடிப்பு இரட்டிப்பானது

அழுகை அறவே வரவில்லை
கண்ணீர் கடுகளவும் கசியவில்லை
கோபம் மட்டும்
கொந்தளித்தது உன்னில்

எது செய்தாலும்
என்ன விடயம் என்றாலும்
என்னிடம் சொல்லி செய்வாயே
எப்படி சொல்லாமல் இது மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும் - பேரப்
பிள்ளைகளும் வருவார்கள்
பிடித்ததெல்லாம் செய்யணும் என
பிரார்த்தனை செய்திருந்தால்
கருணையே வடிவான உன்னிடம்
கருணை காட்டியிருப்பானே காலன்

கனவு போல இருக்கிறது
கண்டது எல்லாம் - இது
கனவு தானென்று சொல்லமாட்டார்களா
கண்முன்னே யாராவது

**அன்புள்ள மகள்**
**- பிரதீபா -**

காற்றுக்கு எதிராகப் போராடிய பிறகே
பட்டங்கள் உயரச் சென்று பறக்கின்றன
கஸ்டங்களை எதிர்த்துப் போராடுகிறவர்கள்
பட்டங்களைப் போல வாழ்வில் உயர்வார்கள்.

**– வின்ஸ்டன் சர்ச்சில் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னைப்போல யாரும் உலகில் உண்டோ....

நாளை வருவீங்களென்று - ஒவ்வொரு
நாளும் ஏங்கி ஏங்கி
நானும் தேடுகிறேன்
நாட்கள் மட்டும் நகருது
உனை காணலையே அம்மா

நீங்காத பாரத்துக்கு
சுமைதாங்கி நீதானே - இன்று
நீங்காத பாரத்தை எனக்கு
சுமையாக தந்தது ஏனம்மா

கடுகளவேனும் நான்
கஷ்ரப் படக்கூடாதென இருந்துவிட்டு
கனமான கஷ்ரத்தை தந்துவிட்டா யே

செல்லமகள் நானென்று
செல்லம் கொஞ்சி ஊட்டிவிடும்
நல்ல வேளை எல்லாம்
நாளை வராதே



உனைப்போல ஒரு அன்னை
உலகில் இல்லையென்று
உவகையோடு இருந்தேனே

உள்ளத்தை உடைச்சுவிட்டு
உயிரை குடைந்து கொண்டு - உன்
உயிர் போனது ஏனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மடியில் படுத்து
உன்னோடு கதை பேசி
உண்டு உறங்கும் சுகம்
உலகில் வேறெங்கு கிடைக்கும் அம்மா

தரணியை தவிக்க விட்டு
தரணியை விட்டு
தான் சென்றதேனோ

என் சோப்பு , கிறீம்,சம்போ
எது பயன்படுத்தினாலும்
என்ன செய்தாலும்
என்னை கேட்டு செய்வாய்

அடம்பிடிக்கும் மகள் -உன்னோடு
அடம்பிடித்து வந்தாலும் என்றா
அமைதியாக சென்றாய் சொல்லாமலே

துன்பமெது வந்தாலும்
துவண்டு போகாத துணிவு தந்து
தாங்கொணா துன்பம் தந்து
தாங்கள் போனது ஏனம்மா

ஆசையாய் அம்மம்மா என்று
அவ்வப்போது கிண்டல் செய்வேன்
அருகில் வந்து ஆசையோடு
அன்பு முத்தம் இடுவேன்

வெட்கப்பட்டு சிரிப்பாய்
வெகுளித்தனமாய் பூரிப்பாய்
சின்னப்பிள்ளைத்தனம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னதாய் சிணுங்குவாய்
சின்னப் பிள்ளை என்னை
தன்னந்தனியே விட்டு
போக மனம் எப்படி வந்தது

உதவிசெய்யும் ராசு அம்மா
உன்னைப்போல யாரம்மா
உந்தன் இடத்தை நிரப்ப
உலகில் யாரும் உண்டோ

**அன்புள்ள மகள்**
**- தரணிகா -**

**சிக்கனமாய் இரு, கஞ்சனாய் இராதே**
**தாராளமாய் இரு, ஊதாரியாய் இராதே**
**மௌனமாய் இரு, ஊமையாய் இராதே**
**நேர்மையாய் இரு, பிடிவாதக்காரனாய் இராதே**

**- கால்வின் கூலிட்ஜ் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

மாமி உங்களைப் பற்றி வார்த்தைகளால்
சொல்லி முடியப்போவதில்லை மனித
மொழியில் உங்களது அன்பான
பாசத்திற்கு வார்த்தைகள் தேட
முடியாது நீங்கள் எங்களிற்கு
ஓர் மாமியாக அன்றி ஓர் தாய்க்கு
நிகராக இடத்தைக் கொடுத்திருந்தீர்கள்
உங்கள் சாந்தமான முகமும்
அன்பான, மற்றவர் மனம் நோகாத
வார்த்தைகளும், எல்லோரையும் அரவணைத்து
வாழ்க்கை என்றால் எவ்வளவு
வாழ வேண்டும் என்பதில் எமக்கு
ஓர் முன்னோடியாக வாழ்ந்து எம்மை
இடை நடுவில் தவிக்க விட்டுள்ளீர்கள் நீங்கள் எம்மையும்
எமது சொந்தங்களையும் விட்டுப்
பிரிந்து சொர்க்க வாசல் சென்று
எமது பாதையில் எம்மோடு என்றும்
கூட இருந்து எம்மையும் எமது
சந்ததியையும் வழி நடத்திச் செல்லும் அம்மா.

யாருக்கு என்ன பிடிக்கும் என்பதை
எள்ளளவும் பிசகாமல் தெரிந்து
வைத்திருந்தீர்கள் எப்போதும்
மருமக்களிற்கே முக்கியத்துவம் கொடுத்து
அவர்களுக்கு பிடித்த சாப்பாடுகளைச் செய்து
கொடுப்பீர்கள். எப்பொழுதுமே எதிலும்
குறை வைக்காத நீங்கள் சாப்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்திலும் எம்மை நிறைவாக்கினீர்கள்,
எந்த நேரத்திலும் வந்தாலும் முகம்
சற்றேனும் சுழிக்காமல் காத்திருந்து
உணவளித்தீர்கள் அம்மா எப்பொழுதுமே அனைவருடனும்
அன்பாக இருக்க வேண்டி உமது
பிள்ளைகளிற்கு அறிவுரை அளித்தீர்கள்
அன்பிற்கு இலக்கியமாய் திகழ்ந்த நீங்கள்
உங்கள் பிரிவிலும் எம்மை அன்புடன்
ஒன்றாக அரவணைத்தீர்கள் எப்பொழுதுமே
உம் முகம் எங்கள் மனக்
கண்களில் தோன்றியிருக்கும் அணையாத
சுடராய் உம் நினைவுகள்
எம் மனங்களில் நிலை கொள்கின்றது.

பாசத்தின் விருட்சத்தில் எமது
பாதையினை சரியாக வழிநடாத்தி
சென்றுள்ளீர்கள் ஒன்றாய் பலமாய்
இருந்த எமது குடும்பத்தில் நாம்
இன்று உம்மைப் பிரிந்து நிற்கின்றோம்
உங்கள் பிரிவு எம்மை
நிலைகுலைய வைத்துள்ளது எங்கள்
மனம் குமுறுகின்றது உங்களோடு
நாம் இருந்த காலத்தில் நீர்
ஓர் சாதாரண மனிதப் பிறவி
அல்ல என்பதை நாம்
கண்டு கொண்டோம் எப்போதும்
சுறுசுறுப்பாக ஏதேனும் செய்து
கொண்டிருக்கும் உங்களை ஒரு நாளேனும்
சுகவீனமுற்றிருந்து நாம் பார்த்ததில்லை
நீங்கள் துன்பத்தில் துவண்டிருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த கஷ்டத்தை எமக்கு வழங்கக்
கூடாதென நினைத்து எம்மை விட்டுப்
பிரிந்தீரோ தெரியவில்லை அம்மா
மனதார உம்மை மீண்டும் ஒருமுறை
அம்மா என அழைக்கின்றோம்

இன்று சிறிது காலமேனும் நீங்கள்
எம்முடனும் எமது பிள்ளைகளுடனும்
இருந்திருக்கலாம் என்றே எமது
மனம் இன்றும் ஏங்குகின்றது அம்மா
என்னதான் அவசரமோ அந்தக்
காலத்திற்கு உம்மை அழைத்து
செல்வதில் அவரிற்கு அவ்வளவு ஆனந்தத்தை
நீர் கொடுத்தீர் போலும் நீங்கள் என்றுமே
எமது நெஞ்சங்களில் வாழ்வீர்கள்
எங்கள் ஒவ்வொருவரிலும் நீங்கள்
சேர்ந்துள்ளீர்கள் நீர் எப்போதுமே
எம்மை விட்டுப் பிரியப் போவதில்லை
என்றுமே நாம் உமது பாசத்திற்காக
ஏங்கி நிற்போம். உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.



**மருமக்கள்**

**ரவீந்திரராஜா, சதீஸ்குமார்,**

**அனுசயதீபா, ஜெஸ்லி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமிகு தங்கையே...

பாசமிகு தங்கையே - எமை
பரிதவிக்க விட்டு
பார்விட்டு போனதேனோ

மணம் முடித்தும்
மக்கள் கண்டும்
மருமக்கள் கண்டும் - பேர
மக்கள் கண்டும்
பிரிந்ததில்லையே நாம்

இதயம் கனக்கவைத்து
இன்று ஏன் பிரிந்தாய்

மூத்தவள்கள் நாமிருக்க
முந்திக் கொண்டு போனதெங்கே
மூச்சிழந்து போனதெங்கே

மகரந்த புன்னகையோடு
மரகத வார்த்தை பேசுபவளே
மறைந்து போனதேனோ

பக்கத்தில் இருந்து - எமை
பக்குவமாய் பார்த்தவளே
சொர்க்கத்துக்கு சென்றாயே

தங்கை இல்லையென
தத்தளிக்கிறோம்
எங்கே இனி கண்போமென
ஏங்கி தவிக்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் முன்னே வராயோ
கண் தூக்கம் தராயோ -எம்
கண்ணீரை நீக்காயோ

எம்மோடு இல்லையென்றாலும்
எம் நினைவோடு
என்றும் நீ வாழ்வாய்



**அன்புள்ள அக்கா**
**- தவமணி,அன்னரத்தினம் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை அன்பு காட்டும் அண்ணி....

அண்ணியாக வந்து
அன்னை அன்பு காட்டி - எம்மோடு
அன்னியோனியமாக இருந்தீங்களே

அமைதியான பேச்சாலும்
அனுசரணையான நடத்தையாலும்
அனைவரையும் கவர்ந்தீங்களே

சண்டையோ - சிறு
சச்சரவோ சஞ்சலமோ
சந்தித்ததில்லையே நாம்

இறுதி நாளன்றும்
இன்முகம் காட்ட - எம்
இல்லம் வந்து போனீங்களே
இதுதான் இறுதி நாளென்று
இதயம் உணரலையே

அண்ணன் தவிப்பானே
அண்ணி நீங்களின்றி
அன்னம் கூட இறங்காதே
அவனுக்கு நீங்களின்றி

ஆறுதல் சொல்ல
ஆயிரம் வார்த்தை தேடுறோம்
ஆற முடியலையே
அழுது அழுதே
அத்தனை பொழுதும் கழியுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வந்தால்
விழுந்து விழுந்து கவனிப்பீங்க
விருந்து வைக்காமல்
வீட்டை விடவே மாட்டீங்கள்

உங்க குணம் கண்டு
எங்க மனம் சிலிர்க்குமே -இன்று
நீங்க இல்லையென்று
எங்க மனம் தவிக்குதே

சலிக்காமல் வேலை செய்யும் - முகம்
சுழிக்காமல் வரவேற்கும்
ஒளி கொண்ட பெண்ணே - எங்கே
ஒளிந்து கொண்டாய்

**அன்பு மைத்துனிமார்**
**- செல்வராணி, விஜயராணி -**

ஐயோ போய்விட்டாரே! என்று சவப்பெட்டி செய்கிறவன் கூட, வருத்தப்பட வேண்டும். அப்படி வாழ்வதுதான் வாழ்க்கை.

– மார்கிட் வெய்ன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்மா

When I first come to Srilanka, my அம்மம்மா made food for me, that time I was 7 years old. sometimes I would go and watch her cook foods. She usually cooks Pittu and Vadai for me. Ifshe had some fish parts that are uneatable, அம்மம்மா would try to attract a cat and show me. I was scored of spider that time. If there was a spider in the room, அம்மம்மா would take a stick and throw the spider outside. Every one misses her, especially தாத்தா, tharani, சித்தி, சித்தி,Jeeva மாமா and my அம்மா. I miss My அம்மம்மா a lot.......

**பேரப்பிள்ளை**
**- varsha குட்டி -**

## அம்மம்மா

I like Ammamah (அம்மம்மா). She talks to me on skype. அம்மம்மா liked it when Song A...B...C song. I really.. really... really miss அம்மம்மா.She really likes me. She likes it when I count up to 100.I'm looking for my அம்மம்மா....Where did she go?

**பேரப்பிள்ளை**
**- Varun குட்டி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மம்மா

அம்மம்மா எனக்கு 2வயதில் இங்கு வந்து நிற்கும் பொழுதுஎனக்கு குளிக்கவார்த்தது சாப்பாடு தீத்தி விட்டனீங்கள். எனக்கு தலைமுடியும் வெட்டிவிட்டனீங்கள். ஒவ்வொரு நாளும் உங்களோட Skype இல் கதைக்கிறனான். இனி எப்போ கதைக்கப்போறன். இன்றைக்கு அம்மா அழுறா தாத்தா அழுகின்றார் பெரியம்மா அழுகின்றார் மாமா அழுகின்றார் தரணிச்சித்தி அழுகின்றார் எங்கு போனனீங்கள் நீங்கள் வருவீங்கள் என்று பார்த்துக் கொண்டிருக்கி றோம். வேளைக்கு வாங்கோ.

**பேரப்பிள்ளை**
**- தீப்தி -**

# அப்பம்மா

பிறந்து வளரவும் இல்லை
அப்பாதான் Skype இல் கதைக்கும்
போது அப்பம்மா என்று
காட்டி கதைப்பார் அப்போது
அப்பம்மாவின் செல்ல கதைகளுடன்
நாமும் மெல்ல கதைக்க ஆரம்பித்தோம்.
எம்கதை தொடங்கும் போது
தம்கதை முடியும் என்று
எண்ணினானோ என்னமோ! இறைவன்
பார்க்கவும் பேசவும் முடிந்ததே
தவிர பழக முடியலையே அப்பம்மா....
எப்போது வருவியள் எம்மிடம்........

**பேரப்பிள்ளைகள்**
**- அஞ்சனா, ஆரணி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அன்ரி

ஆசையாக அழைப்பதற்கு இனியோர் அன்ரியில்லை எமக்கு இனி நீங்கள் வர மாட்டீர்கள் என்பது எம்மால் ஈடு கொடுக்க முடியவில்லை. யார் இல்லாவிட்டாலும் எனக்கு வவியின் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று கூறினீர்களே இப்போது எங்கு சென்று விட்டீர்கள். என்ன உணவு செய்தாலும் எமக்குத் தராமல் உண்ண மாட்டீர்களே இனி அன்பாக தருவதற்கு அன்ரி இல்லை. நீங்கள் இறக்கவில்லை. மீண்டும் வருவீர்கள் என்றே மனம் நினைக்கின்றது. உங்கள் பிரிவை நினைத்து சொல்லியழவும் வார்த்தை வரவில்லை. கத்தியழவும் முடியவில்லை.

We Miss you Anty..........

- தனு, பிரஸ், அரவிந்தன் -

## வெற்றியின் ரகசியம்

அன்பு காட்டு - ஆனால் அடிமையாகிவிடாதே
இரக்கம் காட்டு - ஆனால் ஏமாந்து போகாதே
பணிவாய் இரு - ஆனால் கோழையாய் இராதே
கண்டிப்பாய் இரு - ஆனால் கோபப்படாதே
சிக்கனமாய் இரு - ஆனால் கஞ்சனாய் இராதே
சுறுசுறுப்பாய் இரு - ஆனால் பதட்டப்படாதே
தர்மம் செய் - ஆனால் ஆண்டியாகிவிடாதே
பொருளைத்தேடு - ஆனால் பேராசைப்படாதே
உழைப்பை நம்பு - ஆனால் கடவுளை மறந்து விடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள் புலம்பல்

அன்பின் இதயம் ஒன்று துடிப்பிழந்து போகிறது
எந்தன் இதயமோ உம்மையிழந்து
உருகி கருகி காய்ந்து போனதே – அன்ரி

நகர்ந்து வந்த நாட்களில் நாம்
பகிர்ந்து கொண்ட பாசங்கள்
பழகிய போதெல்லாம் உங்கள்
இளகிய மனம் கொண்டு கண்டோம்

பழகும் போதெல்லாம் அம்மா
என்பதையே உங்களிடமும் உணர்ந்தோம்
இன்று உயிர் பிரிந்தது
என்ற செய்தி அறிந்ததும் உறைந்து
போனோமே அன்ரி
அழியாத நினைவுகளோடு....

**- பெறாமக்கள் -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமாட்டில் குத்து விளக்குகள்

**- கவியரசர் கண்ணதாசன் -**

அந்தக் குத்து விளக்குகள் தலைமாட்டில் எரிந்து கொண்டிருக்கின்றன. அது எரிந்தாலென்ன அணைந்தால் என்ன? அந்தப் படுக்கையில் கிடக்கும் மனித விளக்கு அணைந்து விட்டது. அது எரிந்து கொண்டிருந்தவரை குத்துவிளக்குக ளுக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தது. ஆனால் அந்த விளக்குகளுக்கு ஊற்றும் எண்ணெய்யை இறைவன் ஊற்றாமல் விட்டுவிட்டான். மானிடத்தில் சாகசம் மரணப்படுக்கையோடு நின்றுவிட்டது. மனிதன் செய்த விளக்கைப் போல் எரியாவிட்டால் பத்திரப்படுத்தக் கூடிய நிலையில் அந்த உடம்பு இல்லை. நான்கு நாட்களினால் அது நாறிப்போகும்.

நறுநெய் பூசி வைத்தாலும் அதிலிருந்து பூச்சி புளுக்கள் உற்பத்தியாவதை தடுக்க முடியாது. அந்த மனிதன் அந்தகாரத்தில் கிடக்கிறான். ஆனாலும் அவன் தலைமாட்டில் இரண்டு விளக்குகள் எரிந்து கொண்டிருக் கின்றன. அழுவாரையும் சிரிப்பாரையும் அறியமுடியாத சடலத்திற்கு அந்த விளக்குகள் எந்த வகையில் உதவப்போகின்றன. அந்த விளக்கை ஏற்றுவதும் அணைப்பதுவும் உங்கள் கைகளே! உங்கள் விளக்கை ஏற்றுவதும் அணைப் பதுவும் எவனுடையகைகள்?

மெஞ்ஞானிகளும் விஞ்ஞானிகளும் இங்கே தான் யோசிக்கிறார்கள். எல்லோருடைய விளக்குகளும் அணைய வேண்டியதே. அவை எரிந்த காலத்தையே எத்தனை பேருக்கு வழிகாட்டின என்பதே முக்கியம். சத்தியம் என்ற தாம்பாலத்தில் உங்கள் விளக்கை ஏற்றி வையுங்கள். குருடர் அல்லாதவர்களுக்கு அவை வழிகாட்டிடும். ஒரு கோவணத்தைக் கூட நீங்கள் கொண்டு வந்ததில்லை. உங்கள் உடம்பிலுள்ள தோல் கூட யாருக்கும் கோவணமாக போவதில்லை. நிலையாமையே நிலையானது என்பதே அவனது மரணப்படுக்கை காட்டுகின்றது. அந்தச் சடலத்தை நீங்கள் நன்றாகப் பார்த்துக் கொள்ளவே அந்தக் குத்துவிளக்குகள் எரிந்தது. பிறந்த விளக்கு அணைந்து கிடப்பதை செய்யப்பட்ட விளக்குகள் காட்டிக்கொண்டிருக்கின்றன. மரணத்தில் அடங்கியுள்ள தத்துவத்தை அவை பறைசாற்றுகின்றன. எதையும் மறைக்கும் நாத்திகனே மரணத்தையும் மறுத்துப்பாரு பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்...


பரமனடி சேர்ந்த பாசஜீவனின் செய்தி பகரக்கேட்டு
உடனடியாய் வந்து உதவிகள் செய்தோர்க்கும்,
மரணச்சடங்கில் கலந்துகொண்ட அந்தணர்க்கும்,
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும்,
கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாய் அளித்தோர்க்கும்,
மலர் வளையங்கள், மாலைகள் சூட்டியோர்க்கும்,
தொலைவில் இருந்து தொலைபேசி, கடிதத்தினூடாக
இதயமுற துன்பக்கடலில் மூழ்கியோருக்கும்,
அன்பான ஜீவனின் ஆத்மா சாந்திபெற துதித்தோர்க்கும்,
இம்மலரினை அழகுற அச்சிட உதவிய
சுன்னாகம், முத்து பிறின்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும்,
எமது மனமார்ந்த நன்றியினை
இருகரங்கூப்பித் தெரிவிக்கின்றோம்.

– நன்றி –

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




(★ - அமரத்துவம் அடைந்தவர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான புன்னகையை பறித்து விட்டான் ...........



மல்லாகம் மண்ணில
மல்லிகைப் பூவாய் பூத்தவளே
செல்லப்பாவுக்கு
செல்லமகளாய் வாய்த்தவளே

சின்னப்பிள்ளைக்கு இளையபிள்ளையாய்
சிங்கார நடை போட்டவளே
இராசதுரையோடு இணைந்த
இராஜேஸ்வரி நாமம் கொண்டவளே

மனைமாட்சி செய்து
மக்கட் பேறு பெற்றவளே
பேரப்பிள்ளைகள் மீது
பேரன்பு கொண்டவளே

ஈரைந்து மாதங்கள்
கருவறையில் சுமந்தவளே
ஈடேறும் வரையில்
கருவிழியில் சுமந்தவளே
ஈந்ததெல்லாம் போதுமென்று
கல்லறையில் தூங்குகிறாயோ

முத்து முத்தான சிரிப்பு
முத்தி பெற்று போச்சோ
தித்திப்பான பேச்சு எத்திக்கு போச்சு

திக்கெட்டும் தேடுகிறோம்
திக்கு முக்காடுகிறோம்

அழகான புன்னகையை
அறிவில்லாத காலன்
பறித்து விட்டானே

யார்யாரோ வந்தாலும்
உனைப்போல ஆகிடுமா - பெரும்
யாகம் செய்து எதை பெற்றாலும்
உன் அன்பையது வென்றிடுமா

நித்தம் நித்தம்
பூஜிக்கவேண்டய தெய்வம் நீயல்லவா
தெய்வம்கூட வந்து
பூஜை செய்யும் தாயே உனக்கல்லவா

Muthu Printers, Chunnakam. Tel: 0778058629

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org